
# NAMATHU EELANADU - E-PAPER - JANUARY 2023



# ???????? ??????????????? ????????? ?????????????????? ?????? ??????????!



தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் எம்.எம்.மொஹமட்டுக்கு பதவியை இராஜினாமா செய்யுமாறு நேற்று (27) இரவு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக கொலை மிரட்டல் வந்த எஸ்.பி. திவரத்னவுக்கு மீண்டும் ஒருமுறை குறுஞ்செய்தி மூலம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொலை மிரட்டல் விடுக்கப்பட்ட உறுப்பினர்களான பத்திரன மற்றும் திவரத்ன ஆகியோருக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு கொலை மிரட்டல் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

# ?????????? ???????????? ???????????????? ?????? ???????????????




தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
HERITAGE MONTH
JANUARY



?????????? (NEWSREPORTER)

புலம்பெயர் தமிழர்களின் விடாமுயற்சியால், ஜனவரி மாதம் தமிழ் மரபுத்திங்கள் என இங்கிலாந்து நகரசபையால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதை கொண்டாடும் வகையில், தமிழ் மொழியின் பெருமையயும் தமிழர்களின் கலை கலாச்சார பண்பாடுகளையும் எடுத்துக்காட்டும் மாபெரும் தமிழ் மரபுத் திங்கள் விழா இங்கிலாந்தில் சனிக்கிழமை (28 ஜனவரி 2023) நடைபெற்றது.

பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் தமிழ் தகவல் நடுவம் (TIC) மற்றும் சமூக அபிவிருத்திக்கான மையம் (CCD) ஆகியன இணைந்து கிங்ஸ்டனின் நியூமோல்டனில் உள்ள Jubilee Square எனும் இடத்தில் மேற்படி தமிழ் மரபுத் திங்கள் விழா வெகுசிறப்பாக நடாத்தப்பட்டுள்ளது. Royal Borough of Kingston, Newmalden Partnership,
Institute of Tamil Culture, மற்றும் சறே தமிழ் பாடசாலை ஆகியவர்களின் இணை அனுசரணையுடன் இந்த விழா சிறப்புற நடைபெற்றது. IBC தமிழ், நமது ஈழநாடு மற்றும் மெய்வெளி ஆகியன ஊடக அனுசரணை வழங்கினர்.




தமிழ்
TAMIL


தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
HERITAGE
JANUARY


TAMIL
Green Forest


தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
JANUARY
Green Forest
VELK'S LTD
2023
Green Forest Nursery
Green Education
Green Forest Club
0795 795 5151(UK)




இந்த விழாவிற்கு பிரதம விருந்தினர்களாக லிபரல் டெமாக்ரடிக் கட்சியின் தலைவர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு சேர் எட் டேவி (Rt.Hon.Sir Ed Davey), ரிச்மண்ட் பார்க் மற்றும் நார்த் கிங்ஸ்டன் பாராளுமன்ற உறுப்பினர்
மதிப்பிற்குரிய சாரா ஓல்னி (Hon. Sarah Olney), கிங்ஸ்டன் நகரபிதா கவுன்சிலர் யோகன் யோகநாதன்-Mayor of Royal Borough of Kingston Upon Themes), அவரின் பாரியாரான
மேயரஸ் சரோஜினி யோகநாதன், கிங்ஸ்டன் நகரசபை தலைவர் கவுன்சிலர் அன்றியஸ் கேர்ஸ்ச் (Cllr. Andreas Kirsch), கிங்ஸ்டன் கவுன்சில் நிறைவேற்று பணிப்பாளர் சாரா அயர்லாந்து (Sarah Ireland CEO) ஆகியோர் கலந்து உரையாற்றினர். மேலும் முன்னாள் மேயரும் தற்போதய கவுன்சிலருமான தயா தயாளன் மற்றும்
பல கவுன்சிலர்கள், தமிழ் அமைப்புக்களின் தலைவர்கள், தமிழ் அறிஞர்கள் மற்றும் பிரமுகர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்தனர்.

தமிழர் கலை கலாச்சார பண்பாடுகளை முற்று முழுதாக வெளிக்கொணரும் இக் கொண்டாட்டத்தில் தமிழரின் வீர இசையான பறை இசை முழங்க, கூடவே நாதஸ்வர-தவில் இசையுடன் புலியாட்டம், காவடி ஆட்டம், குதிரையாட்டம், மயிலாட்டம் உட்பட்ட மேலும் பல கண்கவர் தமிழர் கலைகள், தமிழர் பாரம்பரிய உடைகள், திருமண பெண்அலங்காரம் மற்றும் பண்டைய இசை வாத்தியங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தியபடி இலண்டன் நியூமோல்டன் வீதிவழியாக பவனி வந்து, சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்களும் பெரும் திரளான மக்களும் கடும் குளிரிலும் ஒன்றுகூடியிருந்த திறந்த வெளி அரங்கிற்கு வந்துசேர்ந்தனர்.

மேற்குறித்த திறந்த வெளி அரங்கில் தைப்பொங்கல் காட்சிப்படுத்தல் இடம்பெற்றதுடன், அரங்க நிகழ்வுகளும் இடம்பெற்றன. இன்னிய வாத்திய கச்சேரி, தமிழ்தாய் வாழ்த்து நடனம், கோலாட்டம், சிலம்பாட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், புலியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம், தமிழர் வர்மக்கலை மற்றும் கும்மி நடனம்

என தமிழ் திங்கள் கோலகலமாக கொண்டாடப்பட்டதுடன் ஒன்றுதிரண்டிருந்த பெருந்திரளான மக்களிற்கு பொங்கலும் வழங்கி மகிழப்பட்டது.

அதனைத்தொடர்ந்து நியூமோல்டன் மெதடிஸ்த தேவாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த உள்ளக அரங்கிற்கு கொண்டாட்டம் நகர்ந்ததுடன் அங்கே மேலும் பல தமிழர் பாரம்பரிய நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

உள்ளக அரங்கில் சிறப்பம்சமாக “இலங்கைத் தமிழர்கள்: ஒரு காலவரையறையற்ற பாரம்பரியம்” (Tamils of Lanka: A Timeless Heritage) என்ற கண்காட்சி இடம்பெற்றது. தமிழர் வீரவரலாற்றையும், பண்டைய பாவனைபொருட்கள் மற்றும் இனஅழிப்பையும் காட்சிப்படுத்துவதாக இந்த கண்காட்சி அமைந்தது. இதேபோல சமையல் கலை நிபுணரான கௌரி ரூபன் அவர்களின் தமிழ் பாரம்பரிய உணவுக்கண்காட்சியும் இடம்பெற்றது.

அத்துடன், உள்ளக அரங்க நிகழ்வுகளான தவில்- நாதஸ்வர சமா, உடுக்கு இசை, சிறார்களின் நடனங்கள், பொங்கல் பாடல் ஆட்டம், கூத்து, நாடகம் என்பன இடம்பெற்றன.

இந்த நிகழ்வின் அதிவிசேட நிகழ்வாக, பிரேமாலய நாட்டிய சேஸ்திரா கல்லூரியின் ஸ்தாபகரும், யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற ஆசிரியை நாட்டிய கலை மாமணி பிரேமளாதேவி ரவீந்திரன் அவர்கள் பெருமையுடன் வளங்கிய “இன்னியம்” என்ற தமிழர் பாரம்பரிய இசை வாத்தியங்களின் அணிவகுப்பு மற்றும் ஈழ நாட்டியம் (இராவணன் கதை) என்பன இந்த நிகழ்வை மேலும் சிறப்பித்தன. ஐக்கிய இராட்சியம் லண்டன் மாநகரில் முதன் முறையாக தமிழர்களின் ஈழத்து பாரம்பரிய நாட்டியமாகிய கூத்தை லண்டனில் நடைபெற்ற உலகத் தமிழ் மகாநாட்டில் முதன் முறையாக அரங்கேற்றிய பெருமைக்குரிய கலாநிதி திரு. பாலசுகுமார் அவர்களும் கலைமாமணி திருமதி பிரேமளாதேவி ரவீந்திரன் இருவருக்குமே சேரும். அன்று தொடக்கம் இன்றுவரைக்கும் தமிழர் பாரம்பரிய ஈழ நாட்டியத்தை மிக நேர்தியாக தங்கள் மாணவர்களை பயிற்று பலதடவை அரங்கேற்றி வருகின்றனர்.

உஷா ரகுநாதனின் மாணவர்களின் கிராமிய நடனம், V2 நாட்டிய குழுவின் கும்மியாட்டம், கொவென்றி சித்திர கலைமன்ற மாணவர்களின் முருகன் கௌத்தவம் நாட்டிய நாடகம், சாம் பிரதீபன் மற்றும் ரஜித்தா பிரதீபன் அவர்களின் மெய்வெளி கலையக மாணவர்களின் தெருக்கூத்து மற்றும் இறுதியாக தமிழ் மற்றும் தமிழர்களின் தற்போதைய நிலைபற்றிய மெய்வெளி நாடக அரங்க கலைஞர்களின் “வீழாத்தாய்” இசை வழி நாடகமும் அரங்கேற்றப்பட்டன.

தமிழ் கலாச்சாரம் மற்றும் பரம்பரியம் பற்றிய இரண்டாம் தலைமுறையினரின் கலந்துரையாடலும் இடம்பெற்றது.

உலகில் பல இடங்களில் தமிழர் தமிழர் விழாக்கள் இடம்பெற்ற போதும், இந்த விழா மற்றவற்றை விட அதிசிறப்பானதாக இருந்ததாக பார்வையாளர்களால் பாராட்டப்பட்டது. குறிப்பாக, வேறு எங்கும் நடைபெறாத இளைஞர்களின் புலியாட்டம் மிகவும் வரவேற்பைப் பெற்று இருந்தது. கலாநிதி காமராஜர் அவர்களின் வீரக்கலைகள் பாசறையால் வழங்கப்பட்ட கம்பு, சிலம்பு, வாள்வீச்சு மற்றும் வர்மக்கலை காட்சிகள் மிகச்சிறப்பாக இருத்தன.

அதுபோல கலைஞர் சபேஸ் சுகுணசபேசன் தலைமையிலான எட்டு விழிசார் கலைஞர்கள் தமிழ் மரபு சாந்த தமது பிரதிபலிப்புகளை காட்சிப்படுத்தினர்.

இவ்வாறு மேலும் பல அரிய நிகழ்வுகளுடன் இந்த கொண்டாட்டம் வேறு எங்கும் இல்லாதவாறு வெகுசிறப்பாக நிறைவுபெற்றது.






SOUL
Estate Agent
Jenkins Law
TO LET
房產中介
தமிழ்
HERITAGE MONTH
Tamil Heritage Month Celebrations
தமிழ் மரபுத் திங்கள்
கொண்டாட்டம்
Date: 28th January
Time: 10:30am - 3:00pm
Venue: Jubilee Square
Cocks Crescent
New Malden
KT3 4TA
All are welcome!


WHERE
PEOPLE
CONNECT
房產中介
dpd


NEW MALDEN
WHERE PEOPLE CONNECT
dpd


NEW MALDEN FOOD CENTRE
GROCERY
BAKERY
BUTCHER
NEW MALDEN


www.acaqa.co.uk
SHOP
TO LET
020 7440 1840


FAIRY
100s of ways to clean up!
SPRING
Lenor
Outdoorable
Shop 24/7 @ wilko.com


wilko
Deliveries
COCKS CRESCENT


wilko
Deliveries


wilko
Deliveries
VOLUNTEER




















METROPOLITAN POLICE


Green Forest


தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
HERITAGE
JANUARY
Green Forest
PV 00263839
2023
Green Forest Nursery
Green Education
Green Forest Club
0795 795 5151(UK)
VELK'S LTD
Kulakkottan


JUBILEE SQU





தமிழ்
JANUARY
VELK'S LTD


தமிழ்
TAMIL
HERITAGE MONTH


தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
HERITAGE MONTH
JANUARY
JNL
Green Forest


தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
HERITAGE MONTH
JANUARY


தமிழ்
மரபுத் திங்கள்
Green Forest
International


தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
HERITAGE MONTH
JANUARY
JNL


தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
HERITAGE MONTH
JANUARY
JNL


தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
HERITAGE MONTH
JANUARY


தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
HERITAGE MONTH
JANUARY


தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
JANUARY


தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
JANUARY
JNL
Green Forest
International


தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
Green Forest




தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
JANUARY
FEARLESS


தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
HERITAGE MON


தமிழ்
திங்கள்
MONTH
JANUARY






தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
HERITAGE MONTH
JANUARY


தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
HERITAGE MONTH
JANUARY


தமிழ்




தமிழ்
Tamil Heritage Month Celebrations
தமிழ் மரபுத் திங்கள்
All are welcome!








Children's Zone






தமிழ்
HERITAGE MONTH
Tamil Heritage Month Celebrations
தமிழ் மரபுத் திங்கள்
கொண்டாட்டம்
Date: 28th January
Time: 10.30am - 3.00pm
Venue: Jubilee Square
Cocks Crescent
New Malden
All are welcome!


HERITAGE MONTH
Tamil Heritage Month Celebrations
welcome!


தமிழ்
Heritage Month Celebrations
திங்கள்
All are welcome!






Tamil Heritage Month Celebrations
தமிழ் மரபுத் திங்கள்
கொண்டாட்டம்
All are welcome!


Tamil Heritage Month Celebrations
தமிழ் மரபுத் திங்கள்


HERITAGE MONTH
Tamil Heritage Month Celebrations
தமிழ் மரபுத் திங்கள்


HERITAGE MONTH
Tamil Heritage Month Celebrations
தமிழ் மரபுத் திங்கள்
கொண்டாட்டம்


Tamil Heritage Month Celebrations


Tamil Heritage Month Celebrations


HERITAGE MONTH
Tamil Heritage Month Celebrations


Mon - Sat
m - 6.30 pm
தமிழ்
HERITAGE MONTH
Tamil Heritage Month Celebrations
தமிழ் மரபுத் திங்கள்
Date: 28th January
Time: 10:30am - 3:00pm
கொண்டாட்டம்
Venue: Jubilee Square
Cocks Crescent
New Malden
KT3 4TA
All are welcome!


Tamil Heritage Month Celebrations
தமிழ் மரபுத் திங்கள்
கொண்டாட்டம்
All are welcome!




தமிழ்
HERITAGE MONTH
Tamil Heritage Month Celebrations
தமிழ் மரபுத் திங்கள்
கொண்டாட்டம்
All are welcome!


தமிழ்
HERITAGE MONTH
Tamil Heritage Month Celebrations
தமிழ் மரபுத் திங்கள்
கொண்டாட்டம்
All are welcome!

**12 ???????? ????????? ??????? ???????? ????? ???????? ????? ???????????????? ????????!**



12 வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதி  சிவசுப்பிரமணியம் தில்லை ராஜ் குற்றம் எதுவும் நிரூபிக்கப்படாத நிலையில் இன்றைய தினம் (வியாழக்கிழமை) குற்றமற்றவர் என கருதி மன்னார் மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் 13 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் பகுதியில் தில்லை ராஜாவுக்கு சொந்தமான மரக்காலை ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்ட தில்லை ராஜ் கடந்த 12 வருடங்களாக அரசியல் கைதியாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் இன்றைய தினம் (வியாழக்கிழமை) குறித்த வழக்கு மன்னார் மேல் நீதிமன்றத்தில் எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி அரசியல் கைதியான சிவசுப்பிரமணியம் தில்லை ராஜ் குற்றமற்றவர் என்ற அடிப்படையில் விடுதலை செய்தார்.

விடுதலையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தில்லை ராஜ், ”12 வருடங்களின் பின் தான் குற்றமற்றவன் என நிரூபிக்கப்பட்டு விடுவிக்கப் பட்டுள்ளேன்.

எனக்காகவும் என் விடுதலைக்காகவும் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி ரட்ணவேல் அவர்களுக்கும் அவரது உதவியாளர் தாயளனுக்கும் அதே போன்று யாழ் மாவட்டத்தில் 2016 ஆண்டு இடம் பெற்ற வழக்கில் என் சார்பாக ஆஜரான சட்டத்தரணி ரெமிறியேஸுக்கு நன்றிகள்.

நான் எந்த குற்றச்சாட்டுகளும் இன்றி 12 வருடம் சிறையில் இருந்து விடுதலையாகி இருக்கிறேன். என்னை போன்று என்னும் 25 வருடங்களுக்கு மேலாக அரசியல் கைதிகளாக சிறைகளில் எங்களுடம் ஒன்றாக இருந்த பலர் இன்னும் சிறைப்பட்டு இருக்கிறார்கள். அவர்களையும் விரைவில் விடுதலை செய்து தர வேண்டும்” என கண்ணீருடன் கேட்டுக்கொண்டார்.

# ??????????????? ?????????????? ??????? ??????? ??????????




தமிழ் மொழியையும் தமிழர்களின் கலை கலாச்சார பண்பாடுகளையும் கொண்டாடும் மாபெரும் தமிழ் மரபுத் திங்கள் விழா எதிர்வரும் சனிக்கிழமை (28.1.2022) இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது.

பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் தமிழ் தகவல் நடுவம் (**TIC**) மற்றும் சமூக அபிவிருத்திக்கான மையம் (**CCD**) ஆகியன இணைந்து நடாத்தும் மேற்படி தமிழ் மரபுத் திங்கள் கொண்டாட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை **Jubilee Square, New Malden KT3 4TA** எனும் இடத்தில் முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை நடைபெறவுள்ளது.

தமிழர் கலை கலாச்சார பண்பாடுகளை முற்று முழுதாக வெளிக்கொணரும் இக் கொண்டாட்டத்தில் தமிழ் கலைகளான பறை இசை, நாதஸ்வர-தவில் இசை, கோலாட்டம், சிலம்பாட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், புலியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம், மற்றும் கும்மி பாட்டு, தெருக்கூத்து, நாட்டுக்கூத்து என்பன நூற்றுக்கும் அதிகமான கலைஞர்களால் இங்கிலாந்தின் வீதியூடாக ஆடப்பட்டு கோலகல பவணியாக இறுதி நிகழ்வு நடைபெறும் மண்டபத்தை சென்றடையவுள்ளன.

இதில் இங்கிலாந்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் என பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

தமிழ் மொழியையும் அதன் கலை கலாச்சார பண்பாடுகளையும் பிரித்தானியாவிலும் கொண்டாடும் வண்ணம் கடந்த 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பிரித்தானிய பெரு நகர அவை ஜனவரி மாதத்தை பிரித்தானியாவில் தமிழர் பாரம்பரிய மாதமாக பிரகடணப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் நேரலைகள் எமது You Tube (https://www.youtube.com/@namathueelanadu4559) மற்றும் Facebook (https://www.facebook.com/NamathuEelanadu) ஆகியவற்றின் ஊடாக ஒளிபரப்பாகின்றமை குறிப்பிடத்தக்கது.


தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
HERITAGE MONTH
JANUARY
Let's celebrate
Tamil Heritage Month
தமிழ் மரபுத் திங்கள்
கொண்டாட்டம்
Date: 28th January 2023
Venue: Jubilee Square, New Malden KT3 4TA
Time: 10.30 am till 3.00pm
All are welcome!
Brought to you by
NEW MALDEN
KINGSTON
UPON THAMES

# ???????? ????????????????
# ?????????? ???? ?????? ???????
# ??????????? ?????? – ??????????????




மக்களால் நிராகரிக்கப்பட்ட மொட்டுடன் யானை கூட்டு சேருவது வேடிக்கையான விடயம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இன்று யாழ்ப்பாண அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறுதெரிவித்தார்.

வடக்கில் உள்ள நிலைமை போல் தான் தெற்கிலும் நிலைமை இருக்கும் வடக்கிலே தமிழ் தேசிய மக்கள் முன்னணியைத் தவிர மற்றைய அனைத்து தரப்புகளும் மக்கள் மட்டத்தில் செல்வாக்கை இழந்து கொண்டு போகின்ற கட்டத்திலே அவர்கள் நினைக்கின்றார்கள் பிரிந்து நின்றால் செல்வாக்கை கூட்டலாம் என்று அது மட்டும் தான் வித்தியாசம்தெற்கிலேமொட்டு மட்டும் யானை செல்வாக்கை முற்றும் முழுதாக இழந்திருக்கின்ற நிலையில் மொட்டுதேர்தலில் நிற்கவே முடியாத அளவுக்கு நிலைமை உள்ளது.

யானை தேர்தல் காலத்திலே முற்று முழுதாக தூக்கி எறியப்பட்ட நிலையிலே அவர்கள் கூட்டு சேர்ந்தால் மக்கள் செல்வாக்கு எடுக்கலாமென்று நினைக்கிறார்கள் யதார்த்தத்திற்கு முரணாண வகையிலே சிந்தித்து வெற்றி பெறலாம் என்று நினைத்து ஏதோ நடவடிக்கை எடுப்பதாக நினைக்கின்றார்கள்.

மக்களின் உண்மையான யதார்த்தம் மாறப்போவதில்லை மாறாக மக்கள் எப்படி பார்ப்பார்கள் என்றால் நாங்கள் செய்தி ஒன்றை அவர்களுக்கு கொடுக்கப் போகின்றோம் ஆனால் அவர்கள் விளங்கிக் கொள்கிறார்கள் இல்லை என சிந்திப்பார்கள்.

தெற்கிலே ராஜபக்சவுகளுக்குமக்கள் மத்தியில் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையிலே ரணில் விக்கிரமசிங்க மஹிந்த ராஜபக்சவை கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதனால் தான் தப்பித்துக் கொள்ளலாம் என நினைப்பது ஒரு

வேடிக்கையான விடயமாகவே காணப்படுகின்றது. ஒட்டுமொத்தமாக உலகமே நிராகரிக்கின்ற கடந்த தேர்தலிலே மூன்றில் இரண்டு பெரும்பான்மை எடுத்தற்காக மொட்டுடன் யானை கூட்டு சேருவது என்பது வேடிக்கையான விடயமாகும்” என்றார்.

---

# ????. ?????????? ?????????? ????????? ????????? ??????????!



யாழ்ப்பாணம் தெல்லிப்பளை பிரதான வீதியில் சுன்னாக பகுதியில் காரில் பயணித்த விக்டர் எனப்படும் நபருக்கு பட்டாரக வாகனத்தில் வந்த ஜெகன் குழுவினர் மோதி விபத்துக்குள்ளாக்கி வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் செயற்படும் இரண்டு வாள்வெட்டு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக இன்றைய தினம் பகலில் திரைப்பட பாணியில் பட்டாரக வாகனத்தினால் காரொன்றில் பயணித்தவரை மோதி விபத்துக்குள்ளாக்கி வாள் வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த வாழள்வெட்டு தாக்குதலில் நால்வர் காயமடைந்து யாழ்.போதன வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள் குறித்த இடத்தில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதோடு யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் களம் இறக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகிறது.

---

# ???? ????????????? ?????? ????????
# ???????????? ????????????? !



வன மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணி பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தக் காணிகளில் நீண்டகாலமாக வசிக்கும் அல்லது விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வரும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நீண்டகாலமாகப் பேசப்பட்டு வருகின்றது.

இருப்பினும்  இதுவரை தீர்வு கிடைக்காத நிலையில் ஜனாதிபதியின் முயற்சியின் கீழ் வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு அம்பாறை, அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் காடுகள் அதிகம் உள்ள மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இத்திட்டம் முதலில் அமுலாவுள்ளது.

வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட மேற்படி வேலைத்திட்டத்திற்கு அமைச்சின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

---

# 14 ???????? ??????????? ??????????

# ??????????????



ஐரோப்பா முழுவதும் ஆட்கடத்தல் கும்பலை இயக்கியதற்காக 14 இலங்கைப் பிரஜைகளுக்கு வடக்கு பிரான்ஸில் உள்ள நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இது இலாபகரமான குற்றவியல் வலைப்பின்னல்களை ஒடுக்குவதற்கான கண்டம் தழுவிய முயற்சியின் ஒரு பகுதியாகும் என விபரிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் பரிஸுக்கு வடக்கே 80 கிமீ தொலைவில் உள்ள செரிஃபோன்டைன் கிராமத்தில் உள்ள மளிகைக் கடையில் இருந்து இந்த நடவடிக்கையை மேற்பார்வையிட்டதாக குற்றம் சாட்டப்பட்ட முக்கிய சந்தேக நபருக்கு நான்கு ஆண்டுகள் சிறையும், ஓராண்டு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு ஐரோப்பாவில் உள்ள அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து உக்ரைனில் இருந்து கண்டம் முழுவதும் இலங்கை மற்றும் பங்களாதேஷில் இருந்து புலம்பெயர்ந்தவர்களை நகர்த்துவதற்கான விலைகளையும் வழிகளையும் அவர் நிர்ணயித்ததாக புலனாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பிரித்தானியாவை தளமாகக் கொண்ட மற்றொரு சந்தேக நபருக்கு ஐந்தாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது, மற்றவர்களுக்கு குறுகிய சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

பிரான்ஸில் புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை கொவிட்-க்கு முந்தைய பதிவுக்கு அருகில் உள்ளது.

ஆங்கிலக் கால்வாயைக் கடந்து பிரித்தானியாவை அடையலாம் என்ற நம்பிக்கையில், சமீப ஆண்டுகளில் ஐரோப்பாவை நோக்கி குடியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், கடத்தல் கும்பல்கள் செழித்து வளர்ந்துள்ளன.

45,000க்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்தோர் 2022ஆம் ஆண்டில் ஐரோப்பாவின் பிரதான நிலப்பரப்பில் இருந்து பிரித்தானியாவுக்கு ஆபத்தான பயணத்தை மேற்கொண்டனர், இது முந்தைய ஆண்டின் சாதனையை 17,000க்கும் அதிகமாக முந்தியது என அரசாங்க புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

# ????????????? ????????????? ???????? ???????????: ????? ??????? ??????????????? ?????????? ??????????!



தீர்வைப்பற்றி பேசிக்கொண்டே இருப்பது தீர்வாகாது இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், வடக்கு-கிழக்கு தமிழ் அரசியல் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாட்கள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேற்று (வெள்ளிக்கிழமை) கொழும்பில் உள்ள இந்திய தூதுவர் இல்லத்தில் வடக்கு -கிழக்கு தமிழ் அரசியல் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், இருக்கும் அதிகார பகிர்வு விடயங்களை இடைக்கால தீர்வாக அமுல்படுத்தாது போனால் கிடைப்பதும் இல்லாது போய்விடும் என்பதை தமிழ் அரசியல் தரப்புக்கு தெளிப்படுத்தினார்.

தெற்குடனான பேச்சுவார்த்தையின் மூலமாக தீர்வு காண்பதை தமிழர் தரப்பே செய்ய வேண்டும் எனவும் அதில் இந்தியா தலையிட முடியாது எனவும் ஜெய்சங்கர் கூறினார்.

இதை தவிர அதிகார பகிர்வுக்கு எமது ஆதரவை முழுமையாக வழங்கத் தயாராக உள்ளோம் எனவும் தெரிவித்தார்.

# ?????????? ????????????? ?????????????? ????????????!




முன்னாள் வட மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் இன்று(வெள்ளிக்கிழமை) கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

நல்லூர் பிரதேச சபையில் போட்டியிடுவதற்காக முன்னாள் வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் உள்ள தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

# ?????? ??????? ?????! ??????? ???? ???? ?????? ????????



சிவகுரு ஆதின முதல்வரும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளருமான தவத்திரு வேலன்சுவாமிகள் சற்று முன்னர் கைது செய்யப்பட்டுள்ளார். அதேபோல் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மாணவர்கள் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள்ஐவரை கைதுசெய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது

அண்மையில் தேசிய தைப்பொங்கல் விழாவில் பங்கேற்க வந்த ஜனாதிபதியின் வருகைக்கு எதிராக நல்லூர் அரசடிப் பகுதியில் இடம்பெற்ற போராட்டத்தில் பொலிசாரை தாக்கியமை தொடர்பாகவே கைது இடம்பெற்றுள்ளதாக அறியமுடிகிறது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்ட பின்னர்வேலன் சுவாமி கைது செய்யப்பட்டுள்ளார். ஏனையோரும் கைது செய்யப்படவுள்ளதாகவும் போலீசார் தெரிவிக்கின்றனர்